1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 336, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

336—

மும்முனை மின்சாரம்

***17404—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சிப் பகுதியில் மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சிப் பகுதிகளுக்கு தற்சமயம் 110/22/11 K.V. துணை மின் நிலையங்களிலிருந்து... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *11 K.V. இராக்காட்டூர் மற்றும் 11 K.V. பொன்னாச்சி புதூர் ஆகிய உயர் அழுத்த கிராமிய மின் பாதை வழியாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவி வரும் மின் தேவைக்கும், மின் உற்பத்திக்கும் உள்ள இடைவெளி காரணமாக ஏற்பட்டுள்ள தற்காலிக மின் தட்டுப்பாடு சீர் செய்யப்பட்ட பின்னர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி, தகுதி பெறும் சமயத்தில் அதிக நேரம் கூகலூர் பேரூராட்சிப் பகுதிகளுக்கு மும்முனை*

2013 ஏப்ரல் 29]

மின்சாரம் வழங்க பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 337, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

337—

சாலைகள் மேம்பாடு

***7820—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து ஊராட்சி சாலைகளையும் அகலப்படுத்தி தரம் உயர்த்தும் செயற்றிட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் இருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 97,083.00 கிலோ மீட்டர் கிராம ஊராட்சி சாலைகள், 31,105.63 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆக மொத்தம் 1,28,188.63 கிலோ மீட்டர் ஊரகச் சாலைகள் உள்ளன. ஊரகச் சாலைகள் தொகுப்பின் அடிப்படையில், தார்ச் சாலைகள் அல்லாத அனைத்து சாலைகளையும் மேம்படுத்த விரிவான சாலை மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் 36,980 கிலோ மீட்டர் சாலைகள் ரூ.5,743 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் பல்வேறு